மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாகக் கண்டறியப்பட்டு யாத்திரிகர் மண்டபத்தைப் புதுப்பிப்பதற்கு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், சின்ன திருப்பதி கோயிலுக்கு பக்தர்கள் ஏராளமான பேர் வருகின்றார்கள். அப்படி அதிக அளவில் பக்தர்கள் வரும் சூழ்நிலையில், தற்போது ஒரே ஒரு அர்ச்சகர் மட்டும்தான் இருக்கின்றார். பக்தர்கள் அதிகமாக வருவதைக் கணக்கில் கொண்டு, கூடுதலாக அர்ச்சகர் ஒருவரை நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக ஆய்வு செய்து, அர்ச்சகரை நியமிப்பதற்கு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 7, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

7—

சத்துணவு மையம்

***59689—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படும் சத்துணவு மையம் மற்றும் பால்வாடி மையங்களில் பணிபுரியும் ஊழியர்களின் நியமனம், பணி மாற்றம் போன்ற நடவடிக்கைகளை ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2006 ஜனவரி 17]

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படும் சத்துணவு மையம் மற்றும் பால்வாடி மையங்களில் பணிபுரியும் ஊழியர்களின் நியமனம், பணி மாற்றம் நடவடிக்கைகள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவைகளை ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரும் திட்டம் அரசிடம் ஏதுமில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாட்டில் புரட்சித் தலைவர் அவர்களால் தொடங்கப்பட்டு, அனைத்துத் தரப்பினரின் பாராட்டையும் பெற்று, இன்று வரை சிறப்பாகச் செயல்பட்டு வரும் சத்துணவுத் திட்டத்தின் நிர்வாகத்தை, நேரடியாக மாவட்ட நிர்வாகமே கவனித்து வருவதால், குக்கிராமங்களிலுள்ள சத்துணவு மற்றும் பால்வாடி மையங்களில் ஏற்படும் சிறு பிரச்சினைகளைத் தீர்க்க உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க முடியாத நிலை உள்ளது. அதனைப் போக்கிட ஏதுவாக, நிர்வாக நலன் கருதி, சத்துணவு மற்றும் பால்வாடி மையங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பணி நியமனம், பணி மாறுதல் மற்றும் நிர்வாகத்தை அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கே வழங்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் கூறியதைப்போல், ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தப் பணி மாற்றங்கள், நியமனம் எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆங்காங்கு, ஒவ்வொரு பகுதியிலும், அவ்வாறு பிரச்சினைகளோ, அல்லது தவறுகளோ ஏற்பட்டால், அரசின் சார்பாக, அங்கு தவறுகள் செய்பவர்கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும், சத்துணவுப் பணியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்களின் பணி நியமனம், பணி மாறுதல்களை ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திற்குக் கொண்டுவரும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை. இருப்பினும், இது தொடர்பாக அரசு கொள்கை அளவில்தான் முடிவெடுக்க வேண்டும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2006 ஜனவரி 17

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 8, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.*

8—

ஊக்கத் தொகை

***20015—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொள்பவருக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் மகளிருக்கு, மைய அரசு ஊக்கத் தொகையாக ரூ.115/–ம், அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் ஆண்களுக்கு ரூ.135/–ம் வழங்கி வந்தது. கடந்த 1–6–2001 முதல், இத்தொகைகள் முறையே ரூ.200/– மற்றும் ரூ.175/– என உயர்த்தப்பட்டுள்ளது.*

திரு. ஐ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ளக்கூடிய பெண்களுக்கு, மத்திய அரசு ரூ.300/– என்று முன்பு வழங்கிக் கொண்டிருந்தார்கள். அதிலே, அந்தந்த மருத்துவமனையிலே, நிர்வாகச் செலவுக்காக ரூ.150/–ஐ எடுத்துக்கொள்வதாகவும், அதேபோல், ஆண்களுக்கு ரூ.200/– என்று முன்பு வழங்கப்பட்டு வந்தது; அதிலே, ரூ.150/–ஐ கருத்தடை செய்துகொள்ளக்கூடிய ஆண்களுக்குக் கொடுத்துவிட்டு, மீதி ரூ.50/–ஐ நிர்வாகச் செலவுக்காக அந்த மருத்துவமனை எடுத்துக்கொள்வதாகவும் அறிகிறேன். மத்திய அரசாங்கம் அளிக்கக்கூடிய முழுத் தொகையையும் கருத்தடை செய்துகொள்ளக்கூடிய ஆண்களுக்கும், பெண்களுக்கும் வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம்தான் இதற்கான ஒரு வரையறையை வைத்திருக்கிறது. பொதுவாக எடுத்துக்கொண்டால்,*